அனுராதபுரம் மாநகர சபை - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அனுராதபுரம் மாநகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆவது அதிகாரம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் அனுராதபுரம் மாநகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாநகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள்

மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
2024 ஆம் ஆண்டிற்காக கிடைத்த நீதிமன்ற தண்டப்பணம் வருமானம் ரூபா 3,540,045 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டில் விரிவான வருமானக்கூற்றில் இனங்காணப்படாமல் அப்பெறுமதியால் வருமானம் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.	எதர்வரும் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது இவ்வாறான வழுக்கள் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.

1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	ஆதனவரி பட்டோலையின் பிரகாரம் நிலுவை ஆதனவரி ரூபா 79,353,671 தொகை மீளாய்வாண்டின் நிதியின் போது காணப்பட்ட போதும் நிதிக் கூற்றுக்களில் ரூபா 80,265,406 ஆக சீராக்கப்பட்டதனால் ரூபா 911,735 நிலுவை ஆதனவரி வருமானத்தை வேறுபாடு காணப்பட்டது.	சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நேரொத்த பட்டோலைகளுடன் இணக்கம் செய்து சரிசெய்யப்படல் வேண்டும்.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(ஆ) மீளாய்வாண்டின் நிதிநிலைமைக் கூற்றின் பிரகாரம் இருப்பு ரூபா 28,610,157 காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் பட்டோயின் பிரகாரம் இருப்பு ரூபா 27,957,610 ஆனமையில் ரூபா 652,547 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.	சரிசெய்வதற்கு மேற்படி நடவடிக்கை எடுக்கப்படும்.	

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 104,806,593 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 108,130,062 ஆகும்.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

நகர ஆணையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

		2024				2023			
	வருமான மான மூலம்	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
i.	ஆதன வரியும் வரியும்	126,987,300	86,734,354	91,218,426	80,265,405	117,581,041	83,406,370	105,579,178	88,745,511
ii.	வாடகை	65,207,654	58,908,812	52,463,427	85,550,413	112,317,934	108,455,998	99,015,753	78,496,365
iii.	அனுமதிப்பத்திரக் கட்டணம்	13,534,677	13,970,600	15,087,621	3,348,266	29,979,000	39,056,035	36,408,041	8,903,373
iv.	ஏனைய வருமானம்	131,999,738	161,827,035	151,434,163	64,961,558	160,345,351	207,532,842	123,003,729	112,360,175
	மொத்தம்	337,729,369	321,440,801	310,203,637	234,125,642	420,223,326	438,451,245	364,006,701	288,505,424

2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ) வீதவரி		
(i) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 252(i)(அ) பிரிவின் பிரகாரம் ஏதாவது ஆதனவரி வரியொன்று செலுத்தாத போது அந்த ஆதனவரி அறவிட வேண்டிய நிலையத்தின் உரிமையாளரிடம் இருந்து அல்லது கடை உரிமையாளரிடமிருந்து அசையும் அல்லது அசைவுறாத சகல	நாட்டின் பொருளாதார நெருக்கடியினால் நகர மக்களின் வருமானம் குறைவடைந்தமையால் செலுத்துதல்கள் புறக்கணித்தமை மற்றும் அரசாங்க	நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் கொடுப்பனவுகளை புறக்கணித்தவர்களுக்கு எதிராக சட்ட ரீதியான

	ஆதனங்களும் மற்றும் அந்த நிலையத்தில் அல்லது அதன் அடிப்படையில் அந்த நபருக்கே உரித்தாக இருக்கின்ற சகல அசைகின்ற ஆதனங்களும் தடைசெய்யப்பட்டு விற்பனை செய்தவதன் மூலம் அந்த ஆதனவரி மற்றும் அறவிடல் கட்டணம் அறவிடல் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் ரூபா 79,353,671 ஆன நிலுவை ஆதன வரியை அறவிடுவதற்காக மீளாய்வாண்டின் போதும் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நிறுவனத்திலிருந்தும் செலுத்துதல் புறக்கணிக்கப்பட்டமையால் நிலுவை ஏற்படுவதற்கு காரணமாக இருந்தது.	நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ii)	2024 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்பட்ட ஆதனவரிக்காக 2013 ஆம் ஆண்டில் மதிப்பீடு அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதம் வரையில் ஆதனவரி மதிப்பீட்டில் 70 சதவீத அளவு முடிவடைந்துள்ளது.	எதிர்காலத்தில் அறவிடப்படுகின்ற ஆதனவரித் தொகை புதிய மதிப்பீடு அறிக்கையை அடிப்படையாகக் கொள்ளல் வேண்டும்.
(ஆ)	**வாடகை**		
(i)	மீளாய்வாண்டில் கடை வாடகை வருமானமாக ரூபா 27,955,562 மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் வருடாந்த மதிப்பீடடில் இரு மடங்கிற்கு மேற்பட்ட தொகை ரூபா 77,394,872 நிலுவைக் கடை வாடகை காணப்பட்டமையால் கடை வாடகை வருமானம் சேகரித்தலின் செயலாற்றல் மிகவும் குறைவான மட்டத்தில் காணப்பட்டது.	நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு உரிய சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றது.	நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் செலுத்துதல்களை புறக்கணிப்பவர்களுக்கு எதிராக சட்ட ரீதியான நவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ii)	மார்கட் பிரதேசத்தில் இலக்கம் 140 என்ற கடைக்குரிய 2013 செப்டெம்பர் 26 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் மாதம் ஒன்றிற்கு ரூபா 7,500 கடை வாடகை ஒன்றை அறவிடுவதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதிலும் ரூபா 6,400 வீதம் அறவிடப்பட்டமையால் 2013 ஆம் ஆண்டு முதல் 2025 பெப்ரவரி வரையும் ரூபா 150,700 ஆன மாநகர சபையின் வருமானம் இழக்கப்பட்டிருந்தது.	இது தொடர்பாக தற்போதைய நிலைமை எதிர்காலத்தில் அறிவிக்கப்படும்.	நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iii)	2012 யூலை 09 ஆம் திகதி மாகாண மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மார்கட் பிரதேசத்தின் கடை இலக்கம் 73 இற்காக மாதாந்த வாடகை ரூபா 9,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மாதாந்த வாடகை ரூபா 8,000 ஆக அறவிடப்பட்டமையால் 2013 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை ரூபா 144,000 தொகைக்கு அண்மித்த தொகையொன்று மாநகர சபைக்கு இழக்கப் பட்டிருந்தது.	இது தொடர்பாக தற்போதைய நிலைமை எதிர்காலத்தில் அறிவிக்கப்படும்.	நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(iv)	2021 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை கொள்வனவாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 645,825 ஆன விளைச்சல் வரி மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	விளைச்சல் வரி செலுத்தும் ஒழுங்கு முறையாக உடன்படிக்கை செய்யப்படும் வரை அவர்களுக்கு வழங்கப்படுகின்ற உதவிகள் தற்காலிகமாக நிறுத்துமாறு மாவட்ட விவசாய குழுவிலிருந்து கோரப்பட்டுள்ளது.	நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	**அனுமதிப்பத்திரக் கட்டணம்**		
	மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 247(இ)2(1) பிரிவின் பிரகாரம் குறித்துரைத்த திகதியில் வியாபார அனுமதிப்பத்திரம் பெறாமல் வியாபார நடவடிக்கைகளை நடாத்தச் செல்ல முடியாதிருந்த போதிலும் 2024 ஒக்டோபர் 11 ஆந் திகதி வரையில் 02 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் முதல் அனுமதிப் பத்திரம் பெறாமல் வியாபாரங்களை நடாத்திச் செல்கின்ற 173 நிறுவனங்களில் இருந்து ரூபா 1,654,400 சபைக்கு கிடைக்க வேண்டியிருந்த போதிலும் அது தொடர்பாக எந்தவொரு சட்ட ரீதியான நடவடிக்கையும் எடுக்கப்பட்டி ருக்கவில்லை.	இது தொடர்பாக தற்போதைய நிலைமை எதிர்காலத்தில் அறிவிக்கப்படும்.	நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	**ஏனைய வருமானம்**		
	மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும் மற்றும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடம் இருந்தும் 2024 திசம்பர் 31 இல் கிடைக்க வேண்டிய நீதிமன்ற தன்டப்பணம் ரூபா 5,033,280 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 39,293,047 அறவிடப்பட்டிருக்கவில்லை.	முத்திரைக் கட்டணம் தொடர்பாக மாகாண இறைவரித் திணைக்களத்திற்கு உரிய கடிதம் அனுப்பப் பட்டுள்ளதுடன் நிலுவை வருமானத்தை எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவக்கை எடுக்கப்படும்.	நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

மாநகர சபைகள் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 272 ஆம் பிரிவின் கீழ் 34 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்க வேண்டியிருந்த போதிலும் 2024 ஆம் ஆண்டின் போதும் விதித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	தற்போது வரைவு செய்யப்பட்டுள்ள உப விதிகளின் வரைவு ஆளுநரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் மாகாண சபை ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	உப விதிகளை விதிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் இறுதிக் கணக்குகளில் காண் பிக்கப்பட வேண்டிய வருமான விடயங்கள் 05 இன் கூட்டுமொத்தம் ரூபா 574,078 தொகை 2020 இற்கும் 2022 ஆம் ஆண்டுகளுக்கு இடையிலான காலம் முதல் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நிலுவையாக காணப்படுகின்ற ஆதனங்கள் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	விளைச்சல் வரி அறவிடக்கூடிய 11 காணிகள் காணப்பட்ட போதும் 05 காணிகள் மாத்திரம் 2024 ஆம் ஆண்டின் போது வரி செலுத்தப்பட்டடிருந்தது. அதில் வரி செலுத்தும் 03 இடங்களுக்காக உடன் படிக்கை செய்யப்படாதிருந்ததுடன் வரி அறிவித்தலின் பிரகாரம் 02 குத்தகைக்கு வழங்குதலுக்காக உடன்படிக்கை செய்யும் போது அறவிட வேண்டியிருந்த 50 சதவீத கட்டணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.	06 காணிகளுக்காக கேள்வி சமர்க்கப்பட்டுள்ளமையால் 03 வயல் காணிகளுக்குரிய பணத்தை செலுத்துமாறு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.	விளைச்சல் வரி விதிக்கக்கூடிய காணிகள் யாவற்றுக்கும் வரி விதித்து வருமானம் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மார்கட் பிரதேசத்தில் 13 கடைகள் 2012 யூலை 09 ஆம் திகதி மாகாண மதிப்பீட்டுத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு 2024 ஆம் ஆண்டிற்காகவும் கடை வாடகை அறவிடப்படுவதுடன் இதுவரையிலும் அந்த மதிப்பீட்டு அறிக்கை திருத்தப்பட்டு புதிய அறிக்கையொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு மாநகர சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவ்வாறே மார்கட் பிரதேசத்தின் கடைகளுக்காக பிரதன வருமானப் பரிசோதகர் தற்காலிக மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்று வாடகை	நில அளவையாளர் திட்டத்துடன் கடைகளுக்காக தற்போது புதிய மதிப்பீட்டு அறிக்கை கோரப்பட்டுள்ளதுடன் ஏனைய கடைகளுக்காக நில அளவையாளர் திட்டத்தை தயாரிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றது. அந்த நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர்	புதிய மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்று அதன் அடிப்படையில் கடை வாடகையை அறிவிடுவதற்கு விரைவாக நடவக்கை எடுத்தல் வேண்டும்.

	அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	புதிய மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	
(இ)	மார்கட் பிரதேசத்திற்குரிய கடைகள் இறுதித் தடவையாக நாளதுவரையாக்கப்பட்ட வரி உடன்படிக்கை 07 வருடங்கள் முதல் 13 வருடங்களைவிட பழைய உடன்படிக்கை ஆகும்.	அந்த கடைகள் தொடர்பாக முறையான தீர்மானம் ஒன்றை பெற்ற பின்னர் அந்தத் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.	கடைகளுக்காக உரிய வாடகை உடன்படிக்கை நாளதுவரையாக பேணிச்செல்லப்படல் வேண்டும்.
(ஈ)	மார்கட் பிரதேசத்தில் 13 கடைகளுக்குரிய 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,846,526 நிலுவை மீதியொன்று காணப்பட்ட துடன் அதில் கடை இலக்கம் 43 இற்காக 09 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் வாடகைப் பணம் செலுத்தப்படாதிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் எந்தவொரு கடைக்காகவும் தாமதக் கட்டணம் அறவிடப் பட்டிருக்கவில்லை.	உடன்படிக்கையை இரத்துச் செய்து கடைகளை முத்திரையிட்டு கையேற்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் தாமதக் கட்டணம் அறவிடுதல் தொடர்பான கொள்கை ரீதியான தீர்மானத்தை எடுப்பதற்கு நடவக்கை எடுக்கப்படும்.	வாடகை செலுத்துதலை புறக்கணிக்கின்றவர்களுக்கு உடன்படிக்கையை இரத்துச் செய்து கடைகளை முத்திரையிட்டு விரைவாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	பொது விளையாட்டரங்கில் இலக்கம் 01 முதல் 05 வரையான கடைகள் மற்றும் 2014 ஆம் ஆண்டு முதல் 2044 ஆம் ஆண்டு வரையான நீண்டகால வாடகையாக 30 வருடங்களுக்காக வழங்கப்பட்டிருந்ததுடன் இவ்வாறு வாடகைக்கு வழங்கும் போது உள்ள கொடுக்கல் வாங்கல் உடன்படிக்கை பத்திரத்தில் மாதாந்த வாடகை திருத்தப்படு கின்ற முறை தொடர்பாக உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை.	வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டின் சனவரி முதல் மதிப்பீட்டு வாடகையின் கீழ் வாடகை கணிப்பிட முடியுமாக இருந்த போதும் வாடகையாளர் களின் மேன் முறையீட்டின் பிரகாரம் 2024 சனவரி முதல் வாடகை கணிப்பிடப் பட்டதுடன் வாடகையாளர்களால் உரிய பிரகாரம் வாடகை செலுத்தப்பட்டுள்ளது.	உடன்படிக்கையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மாநகர சபையின் உப களஞ்சியத்தின் தேவையான தரப்பினர்களுக்கு பொருட்கள் விநியோகிக்கும் போது 2024 ஒக்டோபர் மாதத்தின் பின்னர் பொருட்கள் விநியோகித்தல் எதுவும் குறிப்பிடப்படாதிருந் ததுடன் ஆண்டின் இறுதி வரையில் 14 கியூப் மணல், 03 கரைசல் தார் பரல்கள் மற்றும் 24 கல் தார் பரல்கள் எந்தவொரு மேற்பார்வையும் இன்றி உப களஞ்சியப் பொறுப்பு உத்தியோகத்தரால் விநியோகிக்கப்பட்டிருந்தது.	முறையான பதிவேடொன்றில் குறிப்பிட்டு அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.	முறையான பதிவேட்டை நாளதுவரையாக பேணிச்செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	உள்ளூராட்சி ஆணையாளரால் 2018 திசம்பர் 08 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட இலக்கம் 02/2018 என்ற சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் 2018 சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட நிலுவை 2019 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன் சேகரிக்கப்படுமாயின் மாத்திரம் நிலுவை வருமானம் அறவிடுதற்காக ஊக்குவிப்புப் படி செலுத்துவதற்காக அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும் மாநகர சபை அந்த விடயங்களைக் கவனத்திற் கொள்ளாமல் 2023 சனவரி 01 முதல் 2023 திசம்பர் 31 வரையான காலத்திற்குரிய நிலுவையை அறவிடுவதற்காக 2024 ஆம் ஆண்டின் போது ரூபா 792,990 ஊக்குவிப்பு படி செலுத்தியிருந்தது.	இந்த ஊக்குவிப்பு படி செலுத்துதல் உள்ளூராட்சி சுற்றறிக்கை 02/2018 அடிப்படையாகக் கொண்டு மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் சேவை களை நடாத்திச் செல்வதற்கு உரிய செலவினத்தைச் செய்வதற்கு உள்ள அதிகாரத்தின் பிரகாரம் அமுல்படுத்தப் பட்டிருந்தது.	சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.5 மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
வடமத்திய மாகாண வருமானப் பரிசோதகர் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் என்ற இரண்டாம் நிலை பதவிகளுக்கான சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் அந்தப் பதவிகளுக்காக உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு திறந்த அல்லது வரையறுக்கப் பட்ட அடிப்படையில் போட்டிப் பரீட்சையில் சித்தியடைதல் அடிப்படைத் தேவையாக இருந்த போதிலும் அரச நிருவாக அமைச்சு செயலாளரின் 2024 யூன் 25 ஆம் திகதிய PL/06/2/36/r-1 என்ற கடிதம் பிழையாக அர்த்தப்படுத்தப்பட்டு வருமானப் பரிசோதகர் சேவையின் இரண்டு பேர்கள் வருமானப் பரிசோதகர் பதவிக்கு மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களில் 06 பதவிகளுக்கு 2024 யூன் 11 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டிருந்தனர்.	இந்த அமய ஊழியர்கள் மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் மூலம் நிரந்தரமாக்கப்பட்டுள்ளனர்.	வருமானப் பரிசோதகர் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் என்ற இரண்டாம் நிலை பதவிகளின் பதவிகளுக்கான சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் அந்த பதவிகளுக்காக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படல் வேண்டும்.

3.6 வாகன முறைமை முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மாநகர சபையினால் பயன்படுத்தப்பட்ட 06 வாகனங்களின் உரித்தை கையேற்கப்படா திருந்ததுடன் அந்த வாகனங்களைப் போன்று மாநகர சபைக்குரிய 02 வாகனங்களுக்காகவும் வருமான அனுமதிப் பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை.	இந்த வாகனங்கள் மாநகர சபையின் பெயரில் கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் பின்னர் வருமான அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	வாகனங்கள் நிறுவனங்கள் பெயரில் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் சகல வாகனங்களுக்காகவும் வருமான அனுமதிப் பத்திரம் பெறப்படல் வேண்டும்.
(ஆ)	சபைக்குரிய ஓட்டத்தில் காணப்படுகின்ற 35 வாகனங்களில் எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	இந்த ஆண்டில் சகல வாகனங்களினதும் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.